செ.வெ. எண்: 517 நாள்: 14.08.2011

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்
# 2011 ஆம் ஆண்டிற்கான
# தமிழக காவல் துறையின் சுதந்திர தின
# காவல் சிறப்புப் பணிப்பதக்கங்கள்!

## மாண்புமிகு முதலமைச்சர் ஆணை!

இந்திய சுதந்திர தினத்தையொட்டி, காவல் துறையில் சிறப்பாகப் பணிபுரிந்திடும் காவல் துறை அதிகாரிகளுக்கு ஆண்டுதோறும் தமிழக முதலமைச்சரின் சிறப்புப் பணிப்பதக்கங்கள் வழங்கி ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

புலன் விசாரணைப் பணியில் மிகச்சிறப்பாகப் பணியாற்றியவர்களின் சிறந்த மதிநுட்பம், ஆர்வம், திறமை, கடின உழைப்பு ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில் கீழ்கண்ட 7 காவல் அதிகாரிகளுக்குத் **தமிழக முதலமைச்சரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப் பணிப் பதக்கங்களை** வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்:

திருவாளர்கள்

1. ஜி. அகஸ்டின் பால் சுதாகர்,
   காவல் ஆய்வாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு)
   டி-3, கொரட்டூர் காவல் நிலையம்
   அம்பத்தூர் மாவட்டம்.
   சென்னை புறநகர் காவல் நிலையம்

2. சு. ரவிசந்திரன்
   காவல் ஆய்வாளர், தலைமையிடம்,
   குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறை,
   சென்னை

...2/–

3. கோ. வேல்முருகன்
காவல் ஆய்வாளர்,
கணிணிவழி குற்றப்பிரிவு,
குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறை
சென்னை

4. வெ. சந்திரசேகரன்
காவல் ஆய்வாளர்,
குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறை,
இராமநாதபுரம்

5. கோ. சரவணன்,
காவல் ஆய்வாளர்,
ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு
குற்றப் புலனாய்வுத்துறை,
மதுரை

6. செ. சந்திரசேகர்
காவல் ஆய்வாளர்,
மாநகர குற்றப் பிரிவு,
கோயம்புத்தூர் மாநகர்

7. க. சவுந்தரராசன்.
காவல் ஆய்வாளர்,
செங்கல்பட்டு மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு
காஞ்சீபுரம் மாவட்டம்

இதேபோன்று, 2011 ஆம் ஆண்டு காவல் துறையில் தனித்துப் பொறுப்பேற்று, பணியில் திறமை, உறுதி, மற்றும் அக்கறையுடன் தன்னிகரற்று விளங்கி, சிறந்த பொதுச்சேவையில் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர்களான கீழ்கண்ட 2 காவல்துறை அதிகாரிகளுக்கு **சிறந்த பொதுச் சேவைக்கான தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம்** வழங்க முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

1. திருமதி. ஹேமா கருணாகரன், இகாப
காவல் துறை துணை ஆணையாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு)
கோயம்புத்தூர் மாநகரம்

...3/–

2. திருமதி அ. திலகவதி
காவல் ஆய்வாளர் (தொழில் நுட்பம்)
கோவை மாவட்ட காவல் தொலை தொடர்பு தொழில் நுட்பப் பிரிவு

மேற்கண்ட விருதுகள் தலா எட்டு கிராம் எடையுடன் கூடிய தங்கப் பதக்கத்துடன், 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் ஒவ்வொருவருக்கும் பின்னர் நடைபெறும் ஒரு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும்.

ரமேஷ்ராம் மிஸ்ரா,
முதன்மைச் செயலாளர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**